**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 03.07.2023
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் மற்றும் தமிழ்நாடுடாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் சிறப்பு கலந்தாய்வு

இந்த கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்திற்கும் தமிழ்நாடு டாக்டர் ஜெ .ஜெயலலிதா மீன் வளப் பல்கலைகழகத்திற்கும் , ஒரே விண்ணப்பம் வழியாக மாணவர் சேர்க்கை நடைபெற்றுவருகிறது . இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 14 இளமறிவியல் பாடப்பி ரிவுகளுக்கும், 3 பட்டயப்படிப்புகளுக்கும் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ .ஜெயலலிதாமீன்வளப் பல்கலைக்கழகத்தில் 6 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும் மற்றும் மூன்று தொழில்முறை பாடப்பிரிவுகளுக்கும் ஒருமித்த வகையில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

**சிறந்த விளையாட்டு வீரர்களுக்கானமற்றும் மாற்றுதிறனாளிகளுக்கான கலந்தாய்வு**

இந்த கல்வியாண்டில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டில் மொத்தம் 756 விண்ணப்பங்களும் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கான சிறப்பு இடஒதுக்கீட்டில் மொத்தம் 79 விண்ணப்பங்களும் வரப்பெற்று இருந்தன . சான்றிதழ்களின் நம்பகத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின் இவர்களில் 287 விண்ணப்பங்கள் (சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு ) மற்றும் 77 விண்ணப்பங்கள் (மாற்றுதிறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு ) தகுதியான விண்ணப்பங்களாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கான தரவரிசைப்பட்டியல் 29.06.2023 அன்று வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 01.07.2023 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் 70 விண்ணப்பத்தார்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் 71 விண்ணப்பத்தார்கள் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா

மீன்வளப் பல்கலைக் கழகத்திற்கும், மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் 64 விண்ணப்பத்தார்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் 15 விண்ணப்பத்தார்கள் தமிழ்நாடு டாக்டர் ஜெ .ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்திற்கும் கலந்தாய்விற்காக அழைக்கப்பட்டு சான் றிதழ் சரிபார்ப்புகள் நடைபெற்று முடிந்தன . அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்தாய்வில் (சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிர்ணயிக்கப்பட்ட 20 இடங்களுக்கும் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ .ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் நி ர்ணயிக்கப்பட்ட 3 இடங்களுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. மாற்றுதிறனாளிகளுக்கான கலந்தாய்வில் கலந்து கொண்டவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 64 இடங்களை தேர்வு செய்தனர்.

சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் மு னைவர்.வெ.கீதாலட்சுமி அவர்கள்சான்றிதழ்களை வேளாண் பல்கலைக்கழக முதன்மையர் . முனைவர். ந. வெங்கடேச பழனிசாமி மற்றும் மீன்வளப் பல்கலைக்கழக முதன்மையர் முனைவர் . பாலசுந்தரி அவர்கள் உடனிருக்க வழங்கினார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**